*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 10, Special Issue 01 (Feb -2026)*
www.ngmtamil.in
*DOI: https://doi.org/10.63300/tm.v10i01feb26.02*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
https://tamilmanam.in/
Issue DOI: https://doi.org/10.63300/tm09012026

# The Divine Form in Nature: A Deep Eco-Spiritual Study through Sangam and Bhakti Literature

**Dr. A. Atheeswari***

Associate Professor, Department of Tamil, The Madura College (Autonomous), Madurai -11, Tamilnadu, India.
*Correspondence : sumasumathi930@gmail.com,

**To Cite this Article**
Dr. A. Atheeswari, "The Divine Form in Nature: A Deep Eco-Spiritual Study through Sangam and Bhakti Literature", *Tamilmanam International Research Journal of Tamil Studies*, Vol. 10, Special Issue 01, February 2026, pp.-13-22.

**Article Info**
Received on 01-Feb-2026, Revised on 10-Feb-2026, Accepted on 11-Feb-2026, Published on 18-Feb-2026

## ABSTRACT

*The Tamil literary tradition has long proposed a philosophy of life that exists in harmony with nature. Sangam literature established a poetic tradition where land and time were prioritized to reflect human emotions. Later Bhakti literature, particularly the hymns of the Thevaram Trio, absorbed these descriptive traditions of the Sangam era and developed the concept of Eco-Theology—perceiving the Divine in every atom of nature.*

*This article explores, both philosophically and literarily, how the Thinai (landform) descriptions found in Sangam literature evolved into Divine manifestations in Bhakti literature. It provides a detailed analysis of how the hymns of the three primary saints—who saw God as the fragrance in a flower and the beauty in water—constructed a Spiritual Environmental Ethic. Furthermore, it describes how ancient Tamil thoughts on Thala Virutchams (sacred temple trees) and biodiversity conservation offer solutions to contemporary environmental degradation.*

***KEYWORDS:*** *Sangam Literature, Bhakti Literature, Thevaram Trio, Eco-Theology, Ainthinai (Five Landscapes), Thala Virutcham (Sacred Trees), Environmental Ethics, Saiva Siddhanta, Biodiversity Conservation.*


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 10, Special Issue 01 (Feb -2026)*
www.ngmtamil.in *DOI: https://doi.org/10.63300/tm.v10i01feb26.02*

# இயற்கைப் பொருளில் இறைவடிவம்: சங்க இலக்கியம் மற்றும் பக்தி இலக்கியத்தின் வழி ஓர் ஆழ்ந்த சுற்றுச்சூழல்-ஆன்மீக ஆய்வு

***முனைவர் அ. ஆத்தீஸ்வரி,** இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை., மதுரைக் கல்லூரி (தன்னாட்சி), மதுரை-11.

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கிய மரபானது பன்னெடுங்காலமாக இயற்கையோடு இயைந்த ஒரு வாழ்வியல் தத்துவத்தை முன்வைத்து வருகின்றது. சங்க இலக்கியங்கள் நிலத்தையும் பொழுதையும் முதன்மைப்படுத்தி மனித உணர்வுகளைப் பிரதிபலிக்கும் கவிதை மரபைக் கொண்டிருந்தன. பிற்காலத்தில் தோன்றிய பக்தி இலக்கியங்கள், குறிப்பாகத் தேவார மூவர் பாடல்கள், சங்க இலக்கியத்தின் வருணனை மரபுகளை உள்வாங்கிக்கொண்டு, இயற்கையின் ஒவ்வொரு அணுவிலும் இறைவனைக் காணும் 'இயற்கையிறைமைக்' கோட்பாட்டை (Eco-Theology) உருவாக்கின. இக்கட்டுரை, சங்க இலக்கியத்தில் காணப்படும் திணை வருணனைகள் எவ்வாறு பக்தி இலக்கியத்தில் இறைவடிவமாகப் பரிணமித்தன என்பதைத் தத்துவார்த்த ரீதியாகவும், இலக்கிய ரீதியாகவும் ஆராய்கிறது. இறைவனைப் பூவில் வாசமாகவும், புனலில் பொறற்பாகவும் கண்ட மூவர் முதலிகளின் பாடல்கள், இயற்கையைப் பாதுகாப்பதற்கான ஓர் ஆன்மீக அறவியலை (Environmental Ethics) எங்ஙனம் கட்டமைத்தன என்பதை இக்கட்டுரை விரிவாகப் பகுப்பாய்வு செய்கிறது. மேலும், தலவிருட்சங்கள் மற்றும் பல்லுயிர் ஓம்பல் குறித்த பண்டைய தமிழரின் சிந்தனைகள் தற்காலச் சுற்றுச்சூழல் சீரழிவுக்கு எவ்விதமான தீர்வுகளை வழங்குகின்றன என்பதையும் இது விவரிக்கிறது.

**திறவுச் சொற்கள்**

சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், தேவார மூவர், இயற்கையிறைமை, ஐந்திணை, தலவிருட்சம், சுற்றுச்சூழல் அறவியல், சைவ சித்தாந்தம், பல்லுயிர் ஓம்பல்.

---

## 1. முன்னுரை

தமிழர்களின் தொன்மையான வாழ்வியல் மற்றும் இலக்கியச் சிந்தனைகள் யாவும் இயற்கையோடு ஒன்றியதாகவே அமைந்துள்ளன. இயற்கை என்பது வெறும் காட்சிப் பொருள் மட்டுமல்ல, அது மனித வாழ்வின் ஆதாரமாகவும், வழிபாட்டுக்குரிய சக்தியாகவும் தமிழர்களால் கருதப்பட்டது. "பிறிதொன்றால் உருவாக்கப்படாது, தனது இயல்பில் மாறாது இருப்பது எதுவோ, அதுவே இயற்கையாகும்". இத்தகைய இயற்கை எனும் சக்தியே உலகை இயக்குகிறது என்பதை உணர்ந்த



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 10, Special Issue 01 (Feb -2026)*
www.ngmtamil.in *DOI: https://doi.org/10.63300/tm.v10i01feb26.02*

பண்டையத் தமிழர், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களின் கலவையே உலகம் என்பதைத் தொல்காப்பிய காலத்திலேயே வரையறுத்தனர்.

சங்க இலக்கியங்களில் வருணனை என்பது ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. நிலத்தை அதன் கருப்பொருள்களின் துணைகொண்டு காட்சிப்படுத்தி, அதன் மூலம் மாந்தர்களின் அக மற்றும் புற உணர்வுகளைப் புலவர்கள் வெளிப்படுத்தினர். ஆனால், பக்தி இலக்கியக் காலத்தில் இந்த வருணனைகள் ஒரு படி மேலே சென்று, இறைவனின் எல்லையற்ற ஆற்றலையும் கருணைத் திறத்தையும் பாடும் களமாக மாறின. இறைவனையும் இறைவன் உறையும் கோயில்களையும் பாடும் போது, மூவர் முதலிகள் இயற்கைப் பொருட்களைக் காட்சிப்படுத்தி, இயற்கையையே இறைவனின் திருமேனியாகவும் அவன் உறையும் இல்லமாகவும் கண்டனர். இக்கட்டுரை, சங்க காலத்தின் மதச்சார்பற்ற இயற்கை வருணனைகள் எவ்வாறு பக்தி காலத்தில் ஆன்மீகப் பரிமாணத்தைப் பெற்றன என்பதை ஆழமாக விளக்குகிறது.

### 2. சங்க இலக்கியத்தில் இயற்கை வருணனை மரபுகள்

சங்க இலக்கியப் பாடல்கள் தமிழர்களின் வாழ்வியல் மற்றும் தொன்மைச் சிந்தனையோடு இணைந்தவை. இவை பெரும்பாலும் இயற்கையோடு இணைந்தே கட்டமைக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியர் நிலத்தை ஐந்தாகப் பகுத்து, ஒவ்வொன்றுக்கும் ஒரு தெய்வத்தை ஒதுக்கினார். "மாயோன் மேய காடுறை உலகமும், சேயோன் மேய மைவரை உலகமும்..." எனத் தொடங்கும் அந்த மரபு, நிலப்பரப்பைத் தெய்வத்தோடு இணைப்பதற்கான ஒரு தொடக்கப் புள்ளியாக அமைந்தது.

### 2.1 திணை வருணனைகளின் குறியீட்டுத் தன்மை

சங்கப் புலவர்கள் இயற்கையை வெறும் மேலோட்டமான அழகியலுக்காகப் பயன்படுத்தவில்லை. நிகழ்ச்சிகளின் பின்புலத்தைச் சொற்களால் கற்போரை உணரச் செய்வதற்கு வருணனைகள் துணையாய் நின்றன. குறிப்பாக, "உள்ளுறை" மற்றும் "இறைச்சி" ஆகிய உத்திகளின் மூலம், இயற்கைப் பொருள்களின் வழியாக வெளிப்படையாகக் கூற இயலாத கருத்துக்களை மறைமுகமாகச் சுட்டினர்.

கார்காலத்தில் முல்லை நிலத்தின் தன்மையினை வருணிக்கும் போது, முல்லை மலரின் அரும்புகள் தலைவியின் புன்னகையாகவும் அல்லது காத்திருப்பின் குறியீடாகவும் பயன்படுத்தப்பட்டன:

"முகைமுற் றினவே முல்லை முல்லையொடு தகைமுற் றினவே தண்கார் வியன்புலம் வாலிழை நெகிழ்த்தோர் வாரார் மாலை வந்தென்றென் மாணலங் குறித்தே" (குறுந்தொகை 188)

இப்பாடலில், முல்லை நிலத்தின் மலர்ச்சி தலைவனின் வருகைக்கான அடையாளமாகக்



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

காட்டப்படுகிறது. இத்தகைய வருணனைகள் நிலவருணனை இயற்கை அமைப்பினை விளக்கும் தன்மையினை உடையனவாய்த் திகழ்ந்தன.

**2.2 நிலவியல் பின்னணியும் அக உணர்வுகளும்**

ஒவ்வொரு திணை மக்களும் இயற்கையோடு ஆழமான ஈடுபாடு கொண்டிருந்தனர். ஞாயிறு, திங்கள், தென்றல், மலர்கள் முதலிய தனி இயற்கைப் பொருட்களை உரிப்பொருளுக்குத் துணையாகக் கொண்டனர். நெய்தல் நிலத்தின் சூழலை விளக்கும் பின்வரும் பாடல், தலைவியின் ஆற்றாமையை நிலவருணனையின் ஊடாகச் சித்தரிக்கிறது:

"மண்துணிந் தன்ன மாஇரும் பரப்பின் உரவுத்திரை கெழீஇய பூமலி பெருந்துறை நிலவுக்குவித்து அன்ன மோட்டுமணல் இடிகரைக் கோடு துணர்ந்து அன்ன குருகொழுக்கு எண்ணி" (நற்றிணை 159)

இப்பாடலில் அலைகள் மோதும் கரிய பெருங்கடல், மணல்மேடு, வரிசையாக அமர்ந்திருக்கும் கடற்குருகுகள் ஆகியவை நெய்தல் நிலத்தின் இயல்பை விளக்கும் பின்புலமாக அமைந்துள்ளன. இது இயற்கையை ஒரு காட்சிப் படிமமாக (Image) மாற்றி, மனிதனின் பிரிவைத் துயரமாகக் காட்டும் உத்தியாகும்.

**3. இயற்கைத் தெய்வ வழிபாட்டின் தோற்றம்**

பண்டைய மனிதன் இயற்கையின் பேராற்றலைக் கண்டு அச்சமடைந்தான். நிலநடுக்கம், எரிமலை, புயல், மழைவெள்ளம், இடிமுழக்கம் போன்றவற்றின் சக்தியைக் கண்டு ஏற்பட்ட அந்த அச்சமே பிற்காலத்தில் பக்தியாக மாறியது. இந்த அச்சமும் வியப்பும் "பயபக்தி" என்ற சொல்லாடலுக்கு அடிப்படையாக அமைந்தது.

சங்க கால மக்கள் ஐம்பூதங்களின் சக்தியைத் தெய்வங்களாக வழிபட்டனர். நிலத்தின் - மலையின் சக்தியை மலைமகளாயும், தீயின் சக்தியை காடு கிழாளாயும், நீரின் சக்தியை கடல் கெழு செல்வியாயும் அவர்கள் போற்றினர். குறிப்பாக, கொல்லி மலைப்பகுதியில் தெய்வமாகக் கருதப்பட்ட "கொல்லிப்பாவை" பற்றிய வருணனை, இயற்கைச் சீற்றங்களுக்கு அப்பாற்பட்டு நிற்கும் இயற்கையின் அழிவற்ற தன்மையை விளக்குகிறது:

"கால்பொருது இடிப்பினும் கதழ் உறை கடுகினும் உரும் உடன்று எரியினும் ஊறுபல தோன்றினும் பெருநிலம் கிளரினும் திருநல உருவின் மாயா இயற்கைப் பாவையின்...." (நற்றிணை 51)

காற்றால் மோதுண்டாலும், பெருமழை பெய்தாலும், இடி இடித்தாலும் அழியாத அந்தப் பாவை, இயற்கையின் மாறாத ஆற்றலுக்குக் குறியீடாக அமைகிறது.

**3.1 ஐம்பூதத் தத்துவம்: இலக்கியத்தில் அறிவியல் மற்றும் ஆன்மீகம்**



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm.v10i01feb26.02*

பண்டையத் தமிழர்கள் உலகமானது ஐம்பூதங்களின் கலவை என்பதைத் தெளிவாக அறிந்திருந்தனர். தொல்காப்பியம் இதனை, "நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்" என்கிறது. புறநானூறும் ஐம்பெரும் பூதங்களின் இயற்கையைத் தெளிவுபடுத்துகிறது.

| **பூதம்** | **இலக்கியக் குறியீடு** | **வழிபாட்டு வடிவம்** |
|---|---|---|
| நிலம் | மண் திணிந்த நிலம் | மலைமகள் / பூமித்தாய் |
| நீர் | தீமுரணிய நீர் | கடல்கெழு செல்வி |
| நெருப்பு | வளித்தலைஇத் தீ | காடுகிழாள் |
| காற்று | விசும்பு தைவரு வளி | சூராமகளிர் |
| ஆகாயம் | நிலம் ஏந்திய விசும்பு | கொல்லிப்பாவை / பரவெளி |

ஆதாரம்:

இந்த ஐம்பூதத் தத்துவமே பிற்காலத்தில் சைவ சித்தாந்தத்திலும், வைணவத்திலும் விரிவுபடுத்தப்பட்டு, இறைவனின் திருமேனியாகப் போற்றப்பட்டது. இறைவன் இந்தப் பூதங்களை இயக்குபவனாகவும், அவற்றில் கரந்துறைபவனாகவும் (Omnipresent) கருதப்பட்டான்.

### 4. பக்தி இலக்கியத்தில் இயற்கையிறைமை (Eco-Theology)

சங்கப் புலவர்கள் காதலைக் கவிதையாகப் பாடுவதற்கு இயற்கை வருணனைகள் எங்ஙனம் வாய்ப்பாக அமைந்ததோ, அங்ஙனமே தேவார மூவர் கடவுளைக் கசிந்துருகிப் பாடுவதற்குப் பல்வகை இயற்கை வருணனைகள் பின்புலமாக அமைந்தன. எங்குமாய் யாவுமாய்த் துலங்கும் இறைவனை, அவன் படைத்த இயற்கையின் வழியாகவே அவர்கள் அணுகினர். பக்தி இலக்கியத்தில் இயற்கை என்பது வெறும் காட்சிப் பொருள் அல்ல; அது இறைவனின் மாண்பை உணர்த்தும் ஓர் அங்கம்.

### 4.1 மூவர் முதலிகளின் இயற்கை வருணனைத் திறன்

சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவர் முதலிகள் திருத்தலங்களின் இயற்கை எழிலைப் பின்புலமாக்கி இறைவனின் பெருமையைப் பேசினர். அவர்கள் இயற்கையைப் பாடும்போது அது இறைவனின் அருட்கொடையாகவே அவர்களுக்குத் தெரிந்தது.

திருஞானசம்பந்தர் தனது பதிகங்களில் அந்தந்த ஊரின் இயற்கை வளத்தை அத்துணை அழகாகப் பதிவு செய்துள்ளார். இதனை இன்றைய ஆய்வாளர்கள் ஒரு "டைம் கேப்ஸ்யூல்" (Time Capsule) எனக் குறிப்பிடுகின்றனர். எடுத்துக்காட்டாக, திருவையாற்றுப் பதிகத்தில் அவர் பாடும் ஒரு காட்சி: "வலம் வந்த மடவார்கள் நடம் ஆட முழவு அதிர மழை என்று அஞ்சிச் சில மந்தி அலமந்து மரம் ஏறி



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

முகில் பார்க்கும் திருவையாறே"

கோயிலில் ஒலிக்கும் மத்தளச் சத்தத்தை இடி என்று கருதி, மழை வரும் என்று அஞ்சி குரங்குகள் மரத்தின் மீது ஏறி வானத்தைப் பார்க்கின்றனவாம். 1300 ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு கிராமியக் காட்சியைச் சம்பந்தர் நம் கண்முன் நிறுத்துகிறார்.

**4.2 இயற்கைப் பொருளில் இறைவடிவம்: ஒரு தத்துவப் பார்வை**

இறைவன் பூவில் வாசமாகவும், புனலில் (நீரில்) அழகாகவும், சந்தனத்தில் நறுமணமாகவும் விளங்குவதாக மூவர் முதலிகள் கருதினர். இதனைச் சம்பந்தர் பின்வருமாறு பாடுகிறார்:

"பூவினில் வாசம் புனலிற்பொற்புப் புதுவிரைச் சாந்தில் நாற்றத்தோடு நாவினில் பாடல்நள் ளாறுடைய நம்பெரு மானிது வென்கொல் சொல்லாய்"

இப்பாடலில் "புனலில் பொற்பு" என்பது நீரில் உள்ள அழகைக் குறிக்கிறது. இறைவன் இயற்கையோடு கலந்து நிற்கும் நிலையினை இது உணர்த்துகிறது. மேலும், அப்பர் சுவாமிகள் இறைவனை இயற்கையின் கூறுகளாகவே காண்கிறார்:

"ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணான்குண மூன்றாய் மாறாமறை நான்காய்வரு பூதம்மவை யைந்தாய் ஆறார்சுவை யேழேசையொ டெட்டுத்திசை தானாய் வேறாயுட னானானிடம் வீழிம்மிழ லையே"

இப்பாடல் இறைவன் ஐம்பூதங்களாகவும், அறுசுவைகளாகவும், எழுவகையான ஓசைகளாகவும், எட்டுத் திசைகளாகவும் விரிந்து நிற்கிறான் என்பதை விளக்குகிறது. இறைவன் எல்லாவற்றிலும் உடனாய் இருந்தும், அதே சமயம் அவற்றிலிருந்து வேறாய் நிற்கும் "அத்துவித" நிலையை இது புலப்படுத்துகிறது.

**5. தலவிருட்சங்களும் பல்லுயிர் பாதுகாப்புச் சிந்தனைகளும்**

தமிழ்நாட்டுக் கோயில்களின் ஒரு சிறப்பம்சமே அவை தாவரங்களோடு கொண்டுள்ள பிணைப்பாகும். பண்டையத் தமிழர்கள் மரங்களைத் தெய்வங்களின் இருப்பிடமாகக் கருதினர். கோயில்கள் கட்டப்படுவதற்கு முன்பே, ஒரு குறிப்பிட்ட மரத்தின் நிழலில்தான் தெய்வம் இருப்பதாக மக்கள் நம்பினர். பின்னர் அங்கே கோயில்கள் எழுப்பப்பட்ட போது, அந்த மரங்கள் வெட்டப்படாமல் "தலவிருட்சங்களாகப்" பாதுகாக்கப்பட்டன.

| **இறைவன்** | **புனித மரம் (தலவிருட்சம்)** | **ஆன்மீகக் குறியீடு** |
|---|---|---|
| சிவபெருமான் | வில்வம், கொன்றை | ஞானம் மற்றும் முக்தி |
| திருமால் | துளசி, பலா, ஆலம் | காத்தல் மற்றும் செல்வம் |



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

| இறைவன் | புனித மரம் (தலவிருட்சம்) | ஆன்மீகக் குறியீடு |
|---|---|---|
| முருகப் பெருமான் | கடம்பு | வீரம் மற்றும் குறிஞ்சி நிலம் |
| விநாயகர் | அரச மரம், வன்னி | அறிவு மற்றும் தொடக்கம் |

ஆதாரம்:

இந்தத் தலவிருட்ச மரபானது ஒரு தனித்துவமான மரபணு வளத்தைப் (Genetic resource) பாதுகாக்கும் முறையாகத் திகழ்ந்தது. ஒவ்வொரு திணைக்கும் உரிய சிறப்பு மரங்கள் மற்றும் விலங்கினங்கள் அங்குள்ள கோயில்களில் போற்றப்பட்டன. இது தற்காலச் சூழலியல் மொழியில் "பல்லுயிர் பாதுகாப்பு" (Biodiversity Conservation) என அழைக்கப்படுகிறது.

### 5.1 விலங்கினங்கள் மீதான பரிவு

சங்க இலக்கியம் மற்றும் பக்தி இலக்கியங்களில் விலங்குகள் வெறும் அலங்காரப் பொருள்களாகக் காட்டப்படவில்லை. அவை மனித உணர்வுகளுக்கு இணையான பண்புகளைக் கொண்டவையாகச் சித்தரிக்கப்பட்டன. சுந்தரர் தனது பதிகங்களில் யானைகள் மனிதர்களுக்குரிய மானத்துடனும் பண்புகளுடனும் வாழ்வதைச் சுட்டிக்காட்டுகிறார். ஒரு ஆண் யானை தனது துணையைத் தேடும் பாங்கு, ஒருவனுக்கு ஒருத்தி என்ற மானிட அறவியலோடு ஒப்பிடப்படுகிறது.

இறைவன் தனது திருமேனியில் பாம்பையும், மானையும் ஏந்தியிருப்பது, கொடிய உயிரினங்கள் மற்றும் சாதுவான உயிரினங்கள் ஆகிய அனைத்துக்கும் அவன் புகலிடம் என்பதை உணர்த்துகிறது. "கலை மான்கள் தங்கள் கால் குளம்புகள் நிலத்தில் பதியுமாறு துள்ள, அங்கே எழும்பும் ஓசையை மலைகள் எதிரொலிக்கின்றன" என்று சம்பந்தர் பாடுவது அக்காலத்தின் செழிப்பான வனவிலங்குச் சூழலை நமக்குக் காட்டுகிறது.

### 6. நீர் மேலாண்மையும் ஆன்மீக அறமும்

"நீரின்று அமையாது உலகு" என்ற வள்ளுவரின் வாக்கு தமிழர்களின் நீர் சார்ந்த அறவியலுக்கு அடிப்படை. மழையை "அமிழ்தம்" என்று போற்றிய தமிழர்கள், மழை பெய்யாவிட்டால் அறமும் தவமும் கூடச் செய்ய இயலாது என்பதை உணர்ந்திருந்தனர்.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு" (திருக்குறள் 18)

வானம் மழையைத் தராவிட்டால், தேவர்களுக்கே கூடப் பூசைகள் நடக்காது என்று மழையின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வலியுறுத்துகிறார். பக்தி இலக்கியத்திலும் மழை என்பது இறைவனின் கருணைக்கு உவமையாகக் கூறப்பட்டது. இறைவன் "வெள்ள நீர் விரிசடைத் தாங்கிய விமலன்" என்று போற்றப்பட்டார். ஆறுகள் மற்றும் நீர்நிலைகளைப் பாதுகாப்பது ஒரு



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm.v10i01feb26.02*

புனிதக் கடமையாகக் கருதப்பட்டது. ஆறுகளின் கரைகளைச் சிதைப்பவன் தண்டனைக்குரியவன் என்ற நீதிமுறை அக்காலத்தில் இருந்தது.

### 7. சுற்றுச்சூழல் அறவியல் (Environmental Ethics) மற்றும் இலக்கியம்

சுற்றுச்சூழல் அறவியல் என்பது மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான உறவை நெறிப்படுத்தும் கோட்பாடாகும். பண்டைய இந்திய மற்றும் தமிழ் இலக்கியங்கள் இயற்கையை ஒரு நுகர்வுப் பொருளாக (Resource) மட்டும் பார்க்காமல், அதனை ஒரு புனிதமான சக்தியாகக் கருதின. "வசுதைவ குடும்பகம்" (உலகமே ஒரு குடும்பம்) என்ற சிந்தனை, அனைத்து உயிரினங்களுக்கும் வாழும் உரிமை உண்டு என்பதை வலியுறுத்தியது.

பக்தி இலக்கியங்கள் மனித மையவாதத்தைத் (Anthropocentrism) தகர்த்து, இறைமையின் ஒரு அங்கமாக இயற்கையை முன்னிறுத்தின. "எவ்வுயிரும் தன்னுயிர் போல் எண்ணுதல்" என்ற ஆன்மீக அறம், பல்லுயிர் பாதுகாப்பிற்குப் பெரும் துணையாக நின்றது. அஹிம்சை (Ahimsa) என்பது மனிதர்களுக்கு மட்டும் அல்லாமல், தாவரங்கள் மற்றும் விலங்குகளுக்கும் இழைக்கப்படாத கொடுமையாக விரிவுபடுத்தப்பட்டது.

### 7.2 தற்காலச் சூழலியல் நெருக்கடியும் இலக்கியத் தீர்வும்

இன்று நாம் எதிர்நோக்கும் புவி வெப்பமடைதல், காடழிப்பு மற்றும் மாசு போன்ற சிக்கல்களுக்குப் பண்டைய இலக்கியங்கள் காட்டும் "இயற்கையிறைமை" ஒரு சிறந்த மாற்றாக அமையக்கூடும். இயற்கையைத் தெய்வமாகப் பார்த்த போது மனிதன் அதனைச் சுரண்ட அஞ்சினான். ஆனால், அறிவியலின் பெயரால் இயற்கையை வெறும் சடப்பொருளாகப் பார்க்கத் தொடங்கிய போதுதான் அதன் அழிவு தொடங்கியது.

"இயற்கையை நாம் துன்புறுத்தினால், இயற்கை நம்மைத் தண்டிக்கும்" என்ற தமிழர்களின் நம்பிக்கை இன்று அறிவியல் பூர்வமாக உண்மையாகி வருகிறது. எனவே, இலக்கியங்களில் பொதிந்துள்ள சுற்றுச்சூழல் ஞானத்தை (Ecological Wisdom) மீட்டெடுப்பது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

### 8. பகுப்பாய்வு மற்றும் கலந்துரையாடல்

இந்த ஆய்வின் மூலம் சங்க இலக்கியம் மற்றும் பக்தி இலக்கியத்தின் இயற்கை சார்ந்த அணுகுமுறைகளில் ஒரு தெளிவான பரிணாம வளர்ச்சியை அறிய முடிகிறது.

1. **வருணனையில் மாற்றம்:** சங்க காலத்தில் இயற்கை என்பது அக உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒரு கருவியாக (Poetic Device) இருந்தது. பக்தி காலத்தில் அது


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

இறைவனின் திருமேனியாகவும், அவனது அருளை வெளிப்படுத்தும் ஊடகமாகவும் மாறியது.

2. **மதச்சார்பின்மை முதல் ஆன்மீகம் வரை:** சங்க இலக்கியம் பெரும்பாலும் மதச்சார்பற்ற (Secular) தன்மையைக் கொண்டிருந்தது. பக்தி இலக்கியம் அதனை ஆன்மீகத் தளத்திற்கு உயர்த்தி, இயற்கையின் ஒவ்வொரு கூறையும் வழிபாட்டுக்குரியதாக மாற்றியது.

3. **அறிவியல் மற்றும் சமயம்:** பதிகங்களில் கூறப்பட்டுள்ள இயற்கை வருணனைகள் வெறும் கற்பனை அல்ல; அவை அக்காலத்தின் தாவரவியல் மற்றும் விலங்கியல் உண்மைகளை உள்ளடக்கியவை. மேளச் சத்தத்தைக் கேட்டு அஞ்சும் குரங்குகள் போன்ற பதிவுகள் இயற்கையின் மீதான தீவிரமான அவதானிப்பை வெளிப்படுத்துகின்றன.

4. **அறவியல் கட்டமைப்பு:** மழையை அமிழ்தமாகவும், மரங்களைத் தெய்வமாகவும் கருதிய மரபு, ஒரு வலிமையான சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கட்டமைப்பைத் தமிழ் சமூகத்தில் உருவாக்கியிருந்தது.

| **அம்சம்** | **சங்க இலக்கியம்** | **பக்தி இலக்கியம்** |
|---|---|---|
| இயற்கையின் பங்கு | பின்புலம் / குறியீடு (Backdrop) | இறைவனின் திருமேனி (Divine Body) |
| நோக்கம் | காதல், வீரம், அறம் | பக்தி, முக்தி, இறைப்பணி |
| தத்துவம் | ஐந்திணை மரபு | அத்துவிதம் / சைவ சித்தாந்தம் |
| அறம் | சமூக அறம் | ஆன்மீக மற்றும் சுற்றுச்சூழல் அறம் |

ஆதாரம்:

## 9. முடிவுரை

இயற்கைப் பொருளில் இறைவடிவம் என்பது வெறும் கவிதை நயம் மட்டுமல்ல, அது ஒரு வாழ்வியல் தத்துவம். மூவர் முதலிகள் காட்டிய இயற்கை நெறி, மனிதனைத் தன்னலமற்ற ஓர் ஆன்மீகப் பயணத்திற்கு இட்டுச் செல்கிறது. இயற்கையை இறைவனாகக் காண்பது என்பது, இயற்கையைப் பாதுகாப்பதற்கான மிக உயரிய வழியாகும். பூவில் மணமாகவும், நீரில் அழகாகவும் உறையும் இறைவனை நாம் உணரத் தொடங்கினால், நம்மைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழல் புனிதமானதாக மாறும்.

இறைவன் இயற்கையின் வடிவமாய் நிற்பவன். அவன் மரம், செடி, கொடிகளாகவும், விலங்குகள்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

மற்றும் பறவைகளாகவும் விளங்கும் தூயோன். சங்கப் புலவர்கள் காட்டிய வழியில் இயற்கையை நேசிக்கவும், பக்திப் பாவலர்கள் காட்டிய வழியில் இயற்கையை வழிபடவும் பழகினால், வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகிடைக்கும். தற்காலச் சுற்றுச்சூழல் சீரழிவுக்கு எதிரான பெரும் போர், நம் இலக்கியங்கள் காட்டும் இந்த ஆன்மீக-சூழலியல் புரிதலிலிருந்தே தொடங்க வேண்டும்.

---

**மேற்கோள் பட்டியல் (References in MLA Style)**


1. அண்ணாமலை, அ. "இயற்கை மீண்டு வருகிறது: சங்க இலக்கியங்களில் சுற்றுச்சூழல் மேன்மை." *டவுன் டூ எர்த்*, 24 மே 2025, www.downtoearth.org.in.
2. அத்தீஸ்வரர், அ. மற்றும் பி. மகிழ்ன். *இயற்கைப் பொருளில் இறை வடிவம்*. மதுரை கல்லூரி, மதுரை, 2023.
3. கபிலன், த. "சங்க இலக்கியத்தில் இயற்கை வழிபாடு." *சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்*, தொகுதி 4, எண் 1, 2022, பக். 480-486.
4. சம்பந்தர், திருஞான. *தேவாரம்: முதல் திருமுறை*. சைவ சித்தாந்த மகா சமாஜம், 1940.
5. திருவள்ளுவர். *திருக்குறள்: தெளிவுரை*. மணிவாசகர் பதிப்பகம், 2012.
6. தொல்காப்பியர். *தொல்காப்பியம்: பொருளதிகாரம்*. சாரதா பதிப்பகம், 2010.
7. பரணர். "நற்றிணை 51." *எட்டுத்தொகை நூல்கள்*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
8. வரதராசனார், மு. *பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை*. பாரி நிலையம், 1964.
9. Senthil Shanmugam, Prem. "Ancient Tamil Wisdom: The Science Hidden in Bhakti Literature." *Tamil Culture*, 19 Mar. 2025, tamilculture.com.
10. Vaswani, S. "Environmental Ethics in Hindu Scriptures: Ancient Wisdom for Modern Challenges." *Journal of Sustainability Development*, vol. 1, no. 1, 2025, pp. 55-60.


Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Copyright © 2026 Tamilmanam International Research Journal of Tamil Studies, All rights reserved.*

Tamilmanam